# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்)

**அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*அனுராதபுர மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செஹான் சேமசிங்க அவர்களால் 2016, சனவரி மாதம் 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 73 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 10.00**

2-PL 009699-225 (2016/01)

## அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்)

## அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

முன்னுரை.

“அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப்பெயர்.

***1.*** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட

குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) முன் பாடசாலை சிறுவருக்கு கல்வி வழங்கல், புலமைப் பரிசில்களை வழங்கல், கல்வி மற்றும் விளையாட்டுத் துறை மேம்பாடு, விசேடமாக பின் தங்கிய நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்குதலும் தொழில் வசதிகளை மேற்கொள்ளலும் ;

(ஆ) தமது பலவீனத்தை ஒழிக்கும் நோக்குடன் பலவீனமுற்ற முதியோர் மற்றும் உளரீதியாக குறைபாடுகளுள்ள ஆட்களுக்கு உதவி ஒத்தாசை வழங்குவதற்கும் மிக நல்ல வாழ்க்கையைக் களிப்பதற்கும் அவர்களுடைய வாழ்க்கை நிலையை முன்னேற்றகரமாக்குவதற்கும் உதவி வழங்கல் ;

(இ) தொழிலற்ற இளைஞர், யுவதிகளுக்கு உதவி அளித்தல் மற்றும் இலாபகரமான தொழிலை வழங்குதல், தங்குமிட வசதி, பயிற்சி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன்மூலம் ;

(ஈ) குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் மற்றும் வறிய குடும்பங்களுக்கு வாழ்க்கை நிலையை மேம்படுத்தல், அதேபோன்று சுயதொழில் சார்ந்த கருத்திட்டங்களில் ஈடுபட ஊக்கமளித்தல், அவர்களுடைய பொருளாதார, கலாசார, சமூக மற்றும் விளையாட்டுத்துறை நடவடிக்கைகளின்பொருட்டு ஊக்குவிப்பளித்தல், அவர்களுடைய வாழ்க்கைநிலை மற்றும் சுகாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கல் ;

(உ) கைத்தொழில் மற்றும் சமூக அபிவிருத்தி கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் தமது முன்னேற்றம்

கருதி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளில் பங்கேற்குமாறு பொதுமக்களை ஊக்குவித்தல் ;

(ஊ) இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் ஏனைய இயற்கை காரணிகளாலும் இன்னலுறும் மற்றும் தமது வாழ்விடங்களை இழந்தவர்களுக்கு உதவியளித்தல், அவர்களுடைய வாழ்க்கையை மீண்டும் தொடங்குவதற்கு உதவியளித்தல் போன்ற மிகச் சிறந்த வாழ்க்கை நிலையை அடைவதற்கு உதவி வழங்கல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான இடைநேர்விளைவானதும் விரும்பத்தக்கதுமான ஏனைய எல்லாக் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய தேர்ந்து நியமிக்கப்படும் முகாமைத்துவப் பேரவை ஒன்றினால் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தினத்திற்கு முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் முகாமைத்துவப் பேரவையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவப் பேரவையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும் திரு. ரவீந்திர அனுர விதானகமகே அவர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகக் கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகள் அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிர்மாணிப்பதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காக வட்டியுடன் அல்லது வட்டியின்றிக் கடன்களைப் பெறவும் பணத்தைத் திரட்டவும் ;

(இ) செலாவணிப்பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கைமாற்றக்கூடிய சாசனங்களை ஆக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பிடவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் மற்றும் வழங்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் மற்றும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை முகாமைத்துவப் பேரவை பொருத்தமானதெனக் கருதும்வகையில் முதலீடுசெய்வதற்கும் ;

(உ) உதவுதொகைகள் சந்தாப்பணங்கள், கொடைகள் நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான பரிசுகள் என்பவற்றைக் கோருவதற்கும் பெறுவதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக எவரேனும் ஆளுடன், கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களை செய்துகொள்ளவும் ;

(எ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களுக்கு ஏற்புடைத்தான சட்டரீதியான நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது நிபந்தனைகளைப் பொறுப்பேற்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமனஞ்செய்யவும் வேலையில் ஈடுபடுத்தவும், பதவிநீக்கஞ் செய்யவும் அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுடையவாறாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) முகாமைத்துவப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், நியமித்தல், பதவிதாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், மற்றும் அவர்களின் அதிகாரங்கள், அவர்களின் பதவிக்காலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் முகாமைத்துவப் பேரவையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பேரவையின் தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தல், முகாமை செய்தல் அத்துடன் அதன் நிதிகளின் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்று அதே போன்ற கூட்டத்திலும், அதே போன்ற முறையிலும் திருத்தவும், மாற்றவும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் படலாம்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு முந்திய தினத்தில் வலுவிலுள்ளதான மன்றத்தின் விதிகள் இச்சட்டத்தினதும் அல்லது வேறு எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வகையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் தற்போது நடைமுறையிலிருக்கும் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. பின்வருவன கூட்டுத்தாபனத்தின் நிதியத்தில் அடங்குதல் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் வரவில் இருந்த எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8**. (1) கூட்டுத்தாபனமானது அதன் சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளரால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

**9**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**10**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. எனினும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படல் வேண்டும். கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகின்ற வேளையிலோ அதற்கு முன்னராகவோ கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்களால் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் பற்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை முகாமைத்துவப் பேரவையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்துடனும் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் இருவர், குறைந்தபட்சம் ஒருவர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தானதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்